1969 மார்ச் 8]

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த உதவித்தொகை கொடுக்கப்படுவதில்லை. மற்ற இடங்களில் தீ விபத்தினால் பாதகம் ஏற்பட்டால் அங்கும் உதவித் தொகை கொடுப்பதோடு அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்கவும் அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : பழைய அரசாங்கம் கொடுத்து வந்த தொகை 40 ரூபாய்தான். புதிய அரசாங்கம் 80 ரூபாய் அளவுக்கு நிதி வழங்குகிறது.

திரு .கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : கிராமங்களில் தீ விபத்து ஏற்படுகின்ற நேரங்களில் ஏழைகள் வீடுகளைக் கட்ட முடியாமல் திண்டாடு கிறார்கள். அதை மனதில் கொண்டு அரசாங்கம் இனிமேல் கிராமங்களிலும் தீ விபத்தால் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு வீடு கட்டும் அளவுக்கு உடனடியாகக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இப்போது அப்படிப்பட்ட யோசனை எதுவும் இன்றுள்ள நிதிநிலைமையில் இல்லை.

திரு வை.சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த காந்தி மார்க்கெட் டிலே ஏற்பட்ட தீ விபத்து காரணமாக கடை கட்டுவதற்கு நகராட்சி எவ்வளவு செலவு செய்திருக்கிறது.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : எவ்வளவு செலவு செய்தது என்ற விவரம் நகராட்சியிடமிருந்து கிடைக்கவில்லை.

ஆக்ராவுக்கு அருகில் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மேல் தாக்குதல்.

*227 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1968-ல் டெல்லியிலிருந்து ஆக்ரா செல்லும் வழியில் தமிழகத் தைச்சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைச் சில வட நாட்டவர் தாக்கினர் என்பதுபற்றி அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள் ளது ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி :

(அ) அரசிடம் இதுபற்றிய தகவல்கள் ஏதுமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, அகில இந்திய ரீதியில் டெல்லி யில் கூட்டுறவு மாநாடு ஒன்று நடந்தது. அந்த மாநாட்டில் தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கொளத்தூர் கோதண்டம் அவர்களும், திரு செஞ்சி முனுசாமி அவர்களும், திரு மா. பா. சாரதி அவர்களும் கலந்து கொண்டார்கள். மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிந்தபிறகு டெல்லி யிலிருந்து ஆக்ரா செல்லும் வழியில் இந்திவெறி பிடித்த மாணவர்கள் அவர்கள் சென்ற காரைத் தாக்க முயன்று இருக்கிறார்கள். இதுபற்றி பாராளுமன்றத்திலும் கேள்வி எழுப்பப்பட்டது என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதுபற்றி மத்திய அரசுக்கு எழுதி பதில் கேட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : மூன்று சட்டமன்ற உறுப்பினர் களும், தமிழ்நாட்டைச் சேர்ந்த வேறு இரண்டு பேர்களும் ஆக்ராவிற்குச் செல்வதற்காக வாடகைக்காரில் செல்லும்பொழுது சில மாணவர்கள் வழிமறித்து, எழுதப்பட்டிருந்த ஆங்கில எழுத்துக்களை அழிக்க வேண்டு மென்று அங்கேயிருந்தவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதற்கு அந்த அந்த வாடைக்காரின் டிரைவரும் உடன்பட்டு ஆங்கில எழுத்துக்களை அழித்து விட்டார். அப்பொழுது அந்தக் கார் தாக்கப்பட்டபொழுது மூன்று சட்ட மன்ற உறுப்பினர்களும் லேசாகத் தாக்கப்பட்டார்கள் என்ற அளவில் பாராளுமன்றத்தில் அதுபற்றி "கால் அட்டென்ஷன்" நோட்டீஸ் கொடுக்கப்

பட்டது. அதற்குப் பதிலளித்த பிரதமர் அவர்கள், தாக்கப்பட்டதற்கான எந்தவிதமான ஆதாரமும் தன்னிடம் இல்லை, தாக்குதல் நடைபெற வில்லை என்று குறிப்பிட்டு, ஆனால் இந்தக் காரியத்தில் ஈடுபட்டவர்கள் ஜனசங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது என்று பிரதமர் அவர்கள் பாராளுமன்றத்தில் கூறினார்கள். ஜனசங்கத் தலைவர் வாஜ்பாய் அவர்கள், எனக்கு அப்படிப்பட்ட தகவல் இல்லை என்றும், அப்படியிருந்தால் விசாரிக்கிறேன் என்றும் குறிப்பிட்டார். அதோடு அந்தப் பிரச்சினை பாராளுமன்றத்தில் முடிவுற்றது.

திரு என். வரதராசன் : தலைவரவர்களே, இந்திய நாட்டில் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இன்னொரு மாநிலத்துக்காரர்களால் தாக்கப் படுவது என்பது இன்று அதிகமாக வளர்ந்துகொண்டிருக்கும்படியான பேராபத்தான காலமாக இருக்கின்றது. இப்படிப்பட்ட காலத்தில், தமிழகத் திலே எண்ணூர், சென்னை எழுகிணறு பகுதிகளிலே உள்ள மலையாளிகள் மீது துவேஷப்பிரச்சாரம் நடைபெறுவதாகத் தகவல் வந்திருக்கிறதே, அது சம்பந்தமாக அரசு உறுதியான நடவடிக்கை எடுக்குமா ? சிவசேனைத் தாக்குதலினால் தமிழக மக்களுக்கும், அவர்களுடைய பொருள்களுக்கும் நஷ்டம் ஏற்பட்டதற்காக நஷ்டஈட்டை வாங்குவதற்கு உரிய வழிகளில் அரசாங் கம் கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மலையாளிகளுக்கு எதிராக ஒருசிலர் சென்னை வட்டாரங்களிலே துண்டு அறிக்கைகளை வெளியிட்டும், சுவரொட்டி களை வெளியிட்டும், மலையாளிகள் வெளியேற வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி என்றும், தமிழர் கட்சி என்றும் பெயராலே பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதுபற்றிய தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. இதற்காக அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு உறுதி யாகத் திட்டமிட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்குச் சொல்லிக் கொள்ளுகின்றேன். சிவசேனையைப் பற்றி முன்பே இந்த மன்றத்தில் பேசி முடிந்த விவாதமாக ஆகியிருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவரவர்களே, கார்களில் ஆங்கில எழுத்துக்கள் இருந்த ஒரேயொரு காரணத்திற்காக அங்கே நாங்கள் தாக்கப்பட்டோம். அங்கே இந்தியிலே கார் நம்பர் பிளேட்டுகள் அனுமதிக் கப்பட்டிருக்கிறது. அதுபோல் தமிழகத்திலேயுள்ள கார்களில் சொந்தக் காரர்கள் விரும்பினால் தமிழ் எழுத்துக்களில் நம்பர் பிளேட்டுகளை வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வியில் புதிய கேள்விக் கான விடை இடம் பெறவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கடந்த ஆண்டு நான் கூட காஷ்மீர்வரை சென்று வந்தேன். அப்பொழுதெல்லாம் இந்தி தெரிய வில்லை என்றாலே அவர்கள் வெறுப்பாக நடத்துகிறார்கள். ஆகையால் இந்திய அரசுக்கு இதுபற்றித் தெரிவித்து நம்முடைய எதிர்ப்பை அவர் களுக்குத் தெரிவிக்க சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதை இந்திய அரசும் அறிந் திருக்கின்றது. அதன்காரணமாக நம்முடைய எதிர்ப்பையும் அவர்களுக்கு அடிக்கடி தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். இந்திய அரசு அறியாமல் இல்லை. அறியாமல் இருந்தால்தான் தெரிவிக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாகவேண்டும்.

நெய்வேலியில் காவல் நிலையங்கள்.

*228 வினா.—**திரு வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி கார்ப்பரேஷன் பிரதேசத்திற்குள் **போலீஸ் நிலை யங்கள் எத்தனை உள்ளன ?**